# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2092/38 - 2018 ඔක්තෝබර් මස 10 වැනි බදාදා - 2018.10.10

**2092/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழான கட்டளை*

*2018 ஆம் ஆண்டின் 246 ஆம் இலக்க கட்டளை*

எனது குறிப்பு இல. : 4-3/7/2016/எச்டபிள்யூ /476.
பி . செ. கு. இல. : 4/1/கா/எடுத்தல்/91/2016.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயன்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் அலுவலருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயன்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர'
1200/6, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2018, ஒற்றோபர் 02.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் அலுவலர்** : பிரதேச செயலாளர், மல்லவபிடிய.

**2. காணியின் விபரம்** : வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில் மல்லவபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 718 கோவான கிராம அலுவலர் பிரிவில், மஹகோவான கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் 2017.02.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் இல. கேயூ/எம்எல்எல்/ 2017/009 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள்:

01. **துண்டு 46-விஸ்தீரணம்: 0.0105 ஹெக்டயார்**
வடக்கு: எச். பீ. ரொசலின் உரிமைகோரும் கோன்கொல்லவத்த; கிழக்கு: துண்டு இல. 45 மற்றும் 56; தெற்கு: துண்டு இல. 56; மேற்கு: துண்டு இல. 47 மற்றும் எம். டீ. எம். டீ சுமனபால உரிமை கோரும் கோன்கொல்லவத்த.

10 - 1349